**செய்தி வெளியீடு எண் : 325** **நாள் : 19.02.2024**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்காக சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்க வளாகத்தில் சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் ரூ. 44 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களையும், பல்வேறு இணையதள சேவைகளையும் துவக்கி வைத்தார்**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் திறந்தவெளி விளையாட்டரங்கம், உள் விளையாட்டரங்கம், நீச்சல் குளம் மற்றும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் குறிக்கோளுடனும் சர்வதேச அரங்கை அலங்கரிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதே அகாடமியின் நோக்கமாக கொண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் வளாகத்தில் ரூ. 17 கோடியே 47 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள மூன்றடுக்கு கட்டிடத்தில் சென்னை ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்பட்ட கட்டடம். அகடாமியின் தரைதளத்தில் பன்நோக்கு விளையாட்டுத் தளம், முதல் தளத்தில் டேக்வாண்டோ மற்றும் ஜூடோ விளையாட்டுத் தளம், இரண்டாவது தளத்தில் வாள்வீச்சு தளம் மற்றும் மூன்றாவது தளத்தில் விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மேல்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ. 5.33 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கொண்ட கட்டடம், மேலும் ரூ. 4.70 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு மையம் அமைக்கப்பட்ட கட்டடம், மேலும் ரூ.2.58 கோடி மதிப்பீட்டில் கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை பயிற்சி மையக் கட்டடம், விளையாட்டு வீரர்கள் சிறந்து விளங்குவதற்கு உதவும் வகையில் அதிநவீன வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறந்த மையமாக அமையப் பெற்றுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் உடற்பயிற்சிச் கூடம், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குளியலறைகள், கழிவறைகள், இருப்பு அறைகள் மற்றும் பார்வையாளர் மாடம் ஆகிய வசதிகளுடன் கூடிய மாவட்ட விளையாட்டரங்கம் ரூ. 9 கோடி

மதிப்பீட்டில் கட்டடம் மேலும் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்கள் மலை மேலிட பயிற்சி மேற்கொள்ளும்போது, இதய செயல்பாடு, தசை செயல்திறன் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு, உடற்வலிமை மற்றும் நீடித்து உழைக்கும் திறன் கிடைத்திடும் வகையில் உலக தரம் வாய்ந்த வசதிகளும் அதற்கான உபகரணங்கள் கூடிய மலை மேலிடப் பயிற்சி மையம் முதல் தளத்திலும் அலுவலக அறை, கணினி அறை, உடற்பயிற்சி அறை, மருத்துவர் அறை, மாணவர்கள் தங்கும் அறை, சமையல் அறை, உணவருந்தும் கூடம் ஆகியவை தரைத்தளத்திலும் அமைக்கப்பட்ட ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டடத்தை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மறுசீரமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தையும், இணையதள சேவைகளான விளையாட்டரங்க பதிவு (Stadia Booking), உறுப்பினர் பதிவு (Membership Booking), உரிமம் பெற்ற வளாக நிர்வாக அமைப்பு (Licensed Premises Management System), உயரிய ஊக்கத்தொகை இணையவழி விண்ணப்பம் (Online High Cash Incentive Application) மற்றும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ்களை Digilocker இணையதளம் வாயிலாக பெறுதல் ஆகிய சேவைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கடந்த பிப்ரவரி மாதம் 9 முதல் 19 வயதுக்குட்பட்ட 14 ஆட்டிசம் வீரர்கள் கடலூர் சில்வர் கடற்கரையில் இருந்து சென்னை மெரினாக் கடற்கரை வரையிலான 165 கிலோ மீட்டர் தூரத்தை 4 நாட்களில் நீந்திச் சாதனை படைத்த வீரர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து சிறப்புப் பரிசினை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in